**செ.வெ.எண்-11** **நாள்-09.04.2018**

# அரியலூர் மாவட்டத்தில் மத்தியஸ்தம் மற்றும் சமரச மையம் தொடங்கி வைக்கப்பட்டது.

அரியலூர் மாவட்டம், மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் தமிழ்நாடு மத்தியஸ்தம் மற்றும் சமரச மையத்தின் 13-வது ஆண்டு விழாவை முன்னிட்டு இன்று (09.04.2018) அரியலூர் மாவட்டத்தில் மத்தியஸ்தம் மற்றும் சமரச மையத்தினை மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிபதி **திருமதி.எம்.டி.சுமதி** அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் முன்னிலையில் திறந்து, தொடங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர்.அபிநவ்குமார், இகப., குற்றவியல் நீதித்துறை நடுவர் / தலைவர் இளைஞர் நீதிக்குழுமம் திருமதி.மகாலெட்சுமி, கூடுதல் மாவட்ட நீதிபதி கே.ஜெயக்குமார், தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் எ.எஸ்.ரவி, வழக்கறிஞர்கள் சங்கத்தலைவர் என்.எஸ்.ஜெயக்குமார், அட்வகேட்ஸ் அசோசியேசன் தலைவர் எ.வி.செல்வராஜ், மத்தியஸ்தம் மற்றும் சமரச மைய உறுப்பினர் ஆர்.செந்தில்குமார் மற்றும் அலுவலர்கள், வழக்கறிஞர்கள், ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

**இந்நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிபதி அவர்கள் தெரிவித்ததாவது:-**

தமிழகத்தில் மத்தியஸ்தம் மற்றும் சமரச மையம் தொடங்கப்பட்டு, 13வது ஆண்டு விழாவை முன்னிட்டு இன்று முதல் அரியலூர் மாவட்டத்தில் இம்மையம் செயல்படவுள்ளது.

இம்மையத்தின் முக்கிய பணிகள், அனைத்து நீதிமன்றங்களிலும் சிவில் மற்றும் குற்றவியல் வழக்குகளை கண்டறிந்து, இம்மையத்தின் மூலமாக தீர்த்து வைக்கப்படவுள்ளது. இச்சமரச மையத்திற்காக சிறப்பு பயிற்சி பெற்று வழக்கறிஞர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நீண்ட நாள் வழக்குகள் விரைந்து முடிக்கப்படவும், மேலும், லோக்ஆயுத்தா இம்மாவட்டத்தில் சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது. நீண்ட நாள் வழக்குகள் தீர்வு செய்யப்பட்டு வருகிறது.

இதுபோன்று இந்த சமரச மையத்தையும் பயன்படுத்தி பொதுமக்கள் தாங்கள் வழக்கு நீண்ட நாட்கள் நிலுவைகள் இருப்பின், இச்சமரச மையத்தின் அணுகி வழக்குகளை விரைந்து முடித்துக்கொள்ளுமாறு மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிபதி **திருமதி.எம்.டி.சுமதி** அவர்கள் தெரிவித்தார்கள்.

**இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

மத்தியஸ்தம் மற்றும் சமரச மையம் என்பது முன்பு கிராமப்புறங்களில் ஊர் முக்கியஸ்தர்களைக்கொண்டு சிறு,சிறு பிரச்சனைகள் தொடர்பாக சமாதான முறையில் பேசி தீர்க்கப்பட்டு வந்தது. தற்பொழுது, உயர்நீதிமன்றம் வழக்குகளின் எண்ணிக்கை மற்றும் குற்ற வழக்குகளை கருத்தில்கொண்டு எளிதாக தீர்க்கக்கூடிய வழக்குகள் நீண்ட நாட்கள் நடைபெற்று வருவதை அறிந்து, இவ்வழக்குகளை விரைந்து முடிக்கும் நோக்கத்தில் சமரச மையத்தினை ஏற்படுத்தி, இதன் மூலம் வழக்குகள் தொடர்பான அனைத்து பிரச்சனைகளும் வழக்கறிஞர்களைக் கொண்டு சமாதான முறையில் பேசி தீர்க்கப்பட்டு வழக்குகள் விரைந்து முடிக்க இம்மையத்தை பொதுமக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

பின்னர், செய்தி மக்கள் தொடர்புத்துறை அதிநவீன மின்னணு விளம்பரத்திரை வாகனத்தின் மூலம் சமரச மையம் தொடர்பான விழிப்புணர்வு குறும்படங்கள் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் காண்பிக்கப்பட்டதை, ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர். பொதுமக்களுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டது.

முன்னதாக, சார்பு நீதிபதி பி.சரவணன் வரவேற்புரையாற்றினார். முடிவில், சிரஸ்தார் தொடர்பு அலுவலர் எம்.வேல்முருகன் நன்றியுரையாற்றினார்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**